**மண்முனை தென்மேற்கு பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மண்முனை தென்மேற்கு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சோலைவரி செலுத்துவோருக்கு 10 சதவீதக் கழிவுகள் வழங்கப்படுகின்ற போதிலும், அவை மொத்தமாக கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் செலவாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் வழங்கப்பட்ட 10% கழிவு கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொடுத்த கழிவு நிதிக்கூற்றுக்களில் செலவாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | குழுவினமடு சமூக குடிநீர் வழங்கல் திட்டத்தில் மீளாய்வாண்டின் இறுதிவரை பயனாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நீர்க்கட்டணம் ரூபா 312,415 தொகையானது நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | நடைமுறையாண்டிலிருந்து நிலுவை நீர்க்கட்டணம் நிதிநிலைமைக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தாக வெளிப்படுத்தப்படும். | நிலுவைகள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் நடாத்தப்படுகின்ற கணினிக் கற்கைநெறிகளுக்கான மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிட வேண்டிய கட்டண நிலுவை ரூபா 94,000 தொகையானது நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் இந்நிலுவை கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | மேற்படி |
| (ஈ) | நிலையான வைப்புக் கணக்கிலிருந்து கிடைத்த மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 75,253 நிதிக்கூற்றுக்களில் வருமானமாகக் காட்டப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் காலத்தில் வங்கியிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டுக்கான வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 59,625,995 பெறுமதியான 04 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு நிலுவைகளை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 24(1) மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளரின் 2013 யூலை 10ஆந் திகதிய கடித இல. BT/ACLG/PL/Road/2013 | சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 253 எண்ணிக்கையான வீதிகளை வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய 253 வீதிகளையும் பெயரிட்டு வர்த்தமானியில் பிரகடனப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வீதிகளை வர்த்தமானியில் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 109,484 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 11,270,709 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 745,200 | 786,640 | 903,460 | 94,405 | 729,655 | 732,565 | 521,340 | 211,225 |
| வாடகைகள் | 810,100 | 681,350 | 681,350 | -- | 795,100 | 352,900 | 352,900 | -- |
| அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,942,850 | 2,040,920 | 2,040,920 | -- | 978,000 | 1,141,867 | 1,141,867 | -- |
| ஏனைய வருமானம் | 23,212,500 | 38,158,456 | 38,755,715 | 2,796,511 | 22,720,265 | 33,392,891 | 35,794,464 | 3,393,770 |
| | 26,710,650 | 41,667,366 | 42,381,445 | 2,890,916 | 25,223,020 | 35,620,223 | 37,810,571 | 3,604,995 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **முத்திரைத் தீர்வைகள்**<br>சான்றிதழ்கள் பொருந்தாமை மற்றும் வங்கியில் வைப்பு செய்தமைக்கான ஆவணங்கள் இல்லாமை காரணமாக, மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைக்கப்பெறவேண்டிய கடந்த 05 ஆண்டுகளுக்கான முத்திரைத் தீர்வைக் கட்டணத் தொகையான ரூபா 3,622,850 இனை மீளப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைத் தீர்வை நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முத்திரைக் கட்டண வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் 114,877Kg உக்கக்கூடிய கழிவுகள் சேகரிக்கப்பட்டு சேதனப்பசளை தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், அவற்றில் 4,000Kg சேதனப்பசளை மாத்திரமே சபையினால் விற்பனை செய்யப்பட்டிருந்தது. எனினும், 2021ஆம் ஆண்டில் பெறப்பட்ட திண்மக்கழிகுளை வெட்டும் இயந்திரம் மற்றும் Compost Screener இயந்திரம் என்பன சேதனப் பசளை உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது பொருத்தமான பொறி முறையூடாக இது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | சேதனப் பசளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 02 உழவு இயந்திரங்கள் மற்றும் 02 தண்ணீர் பவுசர்கள் 07 ஆண்டுகளாக திருத்தப்படாமல் காணப்படுகின்றது. | வாகனங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வேறு திணைக்களங்களினால் சபைக்கு வழங்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள், 03 உழவு இயந்திரங்கள், 01 உழவு இயந்திர இழுவைப் பெட்டி மற்றும் 01 தண்ணீர் பவுசர் என்பனவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | வாகனங்களை உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2006ஆம் ஆண்டின் அரசாங்கப் பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.2.1 இன் பிரகாரம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2006 மார்ச் 26 ஆந் திகதிய 128 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், கொள்வனவுக்கான பெறுகைகள் திட்டமானது சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் உரிய படிவத்தில் தயாரிக்கப்படும். | பெறுகைத் திட்டமானது உரிய படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டும். |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்** | | |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படும் 05 பதவிகளுக்கு 10 வெற்றிடங்களும், 09 ஊழியர்கள் மேலதிகமாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு காலாண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை சீர் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| சபையின் கடமையாற்றி 2013 இல் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை ரூபா 39,297 ஆகும். | கடன் நிலுவைகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஊழியர் கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்று அறிக்கையானது விரைவில் தங்களுக்கு சமர்ப்பிக்கப்படும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் பிரகாரம், சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 11 நடவடிக்கைகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்வரும் ஆண்டில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

**4.3 சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| தேசிய சூழல் சட்டத்தின் 23 (அ) பிரிவின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளை எந்தவொரு நபரும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்தரமின்றி மேற்கொள்ள முடியாது. எனினும், சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படுகின்ற 26 எண்ணிக்கையான தொழில்களை இனங்கண்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கான நடவடிக்கைகள் சபையினால் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை | தற்போது 08 நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனையவற்றிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொழிற்சாலைகள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |